# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C.258/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.1 |
| Name | : | குமார் |
| Father’s Name | : | ஏழுமலை |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 50 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 26.05.2025.

எதிரிகள் அனைவரும் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்துவருகிறேன். கடந்த 08.09.2014ம் தேதி மத்தியம் 3.00 மணி அளவில் நான் அரியம்பூண்டியில் உள்ள எனது கழனிக்கு நடந்து சென்று கொண்டிருந்தேன். எனக்கும், தங்கவேல் என்பவருக்கும் முன்விரோதம் இருந்தது. அவர் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள 1ம் எதிரி ஆவார்.

தங்கவேலுவின் கழனி எனது கழனிக்கு முன்னால் உள்ளது. நான் நடந்து செல்லும்போது என்னுடன் மனைவியும் உடன் வந்திருந்தார். அப்போது 1ம் எதிரி, 2ம் எதிரி என்னையும், எனது மனைவியையும் கொம்பாலும், கையாலும் அடித்தார்கள். அதனால் எங்களுக்கு உடலில் காயம்பட்டது. அங்கிருந்த ஊர்காரர்கள் மடக்கிவிட்டார்கள். பின்பு வீட்டிற்கு சென்றுவிட்டோம். அன்று இரவு 11.00 மணிக்குமேல் 3ம் எதிரி பன்னீர் செல்வம், 4ம் எதிரி பிரசாந்த் மற்றும் சென்னையில் இருந்து 3 நபர்கள் காரில் வந்தார்கள். அவர்கள் என்னையும் எனது மனைவியையும், எனது மகன் வெங்கட்பிரசாந்த் அவரையும் தாக்கினார்கள். 4ம் எதிரி பிரசாந்த் கையில் போட்டிருந்த வளையத்தால் அடித்தார். அதனால் எனக்கு கீழ் உதட்டிலும், வலது கண் புருவத்திலும் காயம் ஏற்பட்டது. எனது மகனுக்கு உதட்டில் ஒரு கிழிந்த காயம் ஏற்பட்டது. அதற்கு தையல் போட்டார்கள். எனது மனைவியின் வலது கால் முட்டியில் காயம் ஏற்படுத்தினார்கள். எதிரிகள் வந்த கார் டெயோட்டோ 11 ஜெ 5124 என்ற எண் ஆகும். நாங்கள் மறுநாள் காலையில் வந்தவாசி அரசு மருத்துவமனையில் சேர்ந்தோம். இரவில் பேருந்து வசதி இல்லாததால் காலையில் சென்றோம். அங்கு வந்து போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்னிம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். போரிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**